செய்தி வெளியீடு எண். 131 நாள்.02.03.2017

# திருவள்ளூர் சி.எஸ்.ஐ கௌடி மேல்நிலைப்பள்ளி மற்றும் வெங்கடேஷ்வரா மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்று வரும் மேல்நிலை (பன்னிரெண்டாம் வகுப்பு) அரசுப் பொதுத் தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

~~~~~

திருவள்ளூர் சி.எஸ்.ஐ கௌடி மேல்நிலைப்பள்ளி மற்றும் வெங்கடேஷ்வரா மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நடைபெற்றுவரும் மேல்நிலை (பன்னிரெண்டாம் வகுப்பு) அரசுப் பொதுத் தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது.

மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் 02.03.2017 முதல் 31.03.2017 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 22,382 ஆண்களும், 24,664 பெண்களும் ஆக மொத்தம் 47,046 தேர்வர்கள் தேர்வு எழுதவுள்ளனர். இத்தேர்வுக்கு 106 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சிறைவாசிகளின் வசதிக்காக புழல் மத்திய சிறையில் தனித்தேர்வர் மையம் ஒன்று அமைக்கப்பட்டு, இம்மையத்தில் 97 சிறைவாசிகள் தேர்வெழுதவுள்ளனர். தேர்வர்கள் முறைக்கேடுகளை தடுப்பதற்காக 74 பறக்கும் உறுப்பினர்களும், 250 நிரந்தரப்படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சார் ஆட்சியர், துணை ஆட்சியர், வருவாய் கோட்ட அலுவலர்கள், காவல் துணை கண்காணிப்பாளர்கள் தலைமையில் 106 தேர்வு மையங்களும் பிரிக்கப்பட்டு திடீர் பார்வையிட பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

திருவள்ளூர் சி.எஸ்.ஐ கௌடி மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் பொதுத்தேர்வு எழுதும் மையத்தினையும், வெங்கடேஷ்வரா மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் மற்றும் பார்வையற்ற மாற்றுத்திறனாலி மாணவர் முனுசாமி தேர்வு எழுதுவதை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டார். இன்று 02.03.2017 மொழி பாடம் தாள்-1 தேர்வு நடைபெறுகிறது. பூவிருந்தவல்லி கண்பார்வை அற்றவர்களுக்கான சிறப்பு பள்ளியில் 22 மாணவர்கள் பொதுத்தேர்வு எழுதுகிறார்கள்.

இவ்வாய்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.த.ராஜேந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் (திருவள்ளூர்) திருமதி.லில்லிபுஷ்பம், கல்வி துணை ஆய்வாளர் திரு.இ.ராமமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~